தினமணி

**கரும்பு டன்னுக்கு ரூ.1840**

First Published : 23 Jul 2010 09:03:11 AM IST

புதுச்சேரி, ஜூலை 22: புதுச்சேரியில் கரும்பு டன்னுக்கு ரூ.1840 வழங்கப்படும் என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் மு.கந்தசாமி அறிவித்துள்ளார்.

÷புதுச்சேரி சட்டப்பேரவை வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் கரும்பு விவசாயிகள் சங்க பொருப்பாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம் வியாழக்கிழமை நடந்தது. இதில் அமைச்சர் மு.கந்தசாமி கலந்துகொண்டார்.

÷கரும்பு இடு பொருள்களின் விலை உயர்ந்துள்ளதால், டன்னுக்கு ரூ.2 ஆயிரம் உயர்த்தி வழங்க வேண்டும் என்று கரும்பு விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

÷கந்தசாமி பேசியது: 2009- 10-ம் ஆண்டில் அறவைக்கு கரும்பு அனுப்பிய விவசாயிகளுக்கு, முன்பு வழங்கப்பட்டதைவிட ரூ.360 கூடுதலாக, ரூ.1840 வழங்கப்படும். விவசாயிகள் ஆலை தொடர்ந்து இயங்க, போதுமான கரும்பை உற்பத்தி செய்து ஆலைக்கு அனுப்பிவைக்க வேண்டும். அடுத்த ஆண்டு மேலும் உயர்த்தப்படும் என்றார்.

**நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற யோசனை**

First Published : 22 Jul 2010 10:31:49 AM IST

காரியாபட்டி, ஜூலை 21: நிலக்கடலையில் கூடுதல் மகசூல் பெற நரிக்குடி வட்டார வேளாண் உதவி இயக்குநர் சக்கரவர்த்தி யோசனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

சாதாரண நிலையில் நிலக்கடலையின் முளைப்புத் திறன் குறைந்தபட்சம் 70 சதவீதம் இருக்க வேண்டும். விதைகளைக் கடினப்படுத்தும் முறையில் விதை நேர்த்தி செய்து, விதைப்புப் பணியை மேற்கொள்ளும்போது அதிகமாக 95 சதவீதம் முளைப்புத் திறன் ஏற்பட்டு, அதிக எண்ணிக்கையில் செடிகள் பராமரிக்கப்படுகின்றன. இதனால் 15 முதல் 20 சதவீதம் வரை கூடுதல் மகசூல் பெற முடிகிறது.

விதைப்பதற்குத் தேவையான கடலைப் பருப்பை ஒரு பிளாஸ்டிக் வாளியில் போட வேண்டும். விதையின் கொள்ளளவு எவ்வளவு வருகிறதோ, அதில் பாதி அளவுக்கு மட்டும் நீர் எடுத்துக் கொண்டு, அதில் 0.5 சதம் அளவுக்கு கால்சியம் குளோரைடு கலந்து, அதில் விதைகளை ஆறு மணி நேரம் ஊற வைக்க வேண்டும்.

பின் அவற்றை ஈரமான சாக்குத் துணியின் மீது போட்டு, அதன்மீது மற்றொரு ஈரமான சாக்கால் மூடி ஒரு நாள் முழுவதும் அப்படியே வைக்க வேண்டும். அடுத்த நாள் லேசாக முளைவிட்ட

விதைகளைத் தனியாகச் சேகரிக்க வேண்டும். இம் முறையை இரண்டு மணி நேரத்துக்கு ஒருமுறை, திரும்பச் செய்வதால் முளைக்கும் தன்மையுடைய விதைகளை தனியாகச் சேகரிக்கலாம்.

விதைகளை நிழலில் உலர்த்தி விதையின் ஈரப் பதத்தை 10 சதத்துக்குக் கொண்டு வர வேண்டும். இந்த விதைகளை 7 முதல் 10 நாள்கள் வரை வைத்திருந்து விதைக்கலாம். இம் முறையில் முளைப்புத் திறன் இல்லாத விதைகள் எளிதாக இனம் காணப்பட்டு, ஒதுக்கி வைக்கப்படுகிறது. விவசாயிகள் இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பயன் பெறலாம் எனத் தெரிவித்துள்ளார்.

**சங்ககிரி, தேவூர் வேளாண் மையங்களில் மானிய விலையில் ஜிப்சம்**

First Published : 22 Jul 2010 10:23:17 AM IST

சங்ககிரி, ஜூலை 21: தேசிய வேளாண் மேம்பாடு திட்டத்தின் கீழ் சங்ககிரி வட்டார விவசாயிகளுக்கு மானிய விலையில் ஜிப்சம் வழங்கப்படுவதாக, வேளாண் உதவி இயக்குநர் ப.செளந்தரராஜன் தெரிவித்துள்ளார். இத் திட்டத்தில் விவசாயிகளுக்குத் தேவையான 120 மெட்ரிக் டன் ஜிப்சம், சங்ககிரி மற்றும் தேவூர் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு, விநியோகம் செய்யப்படுகிறது.

ஒரு ஹெக்டேருக்கு 400 கிலோ ஜிப்சமும், ஹெக்டேருக்கு அதிகபட்சமாக 750 ரூபாய் மானியமாகவும் வழங்கப்படுகிறது. ஜிப்சம் தேவைப்படும் விவசாயிகள், சங்ககிரி மற்றும் தேவூர் வேளாண் விரிவாக்க மையங்களை அணுகலாம்.

உதவி வேளாண் அலுவலர்களின் பரிந்துரை பெற்று மானிய விலையில் ஜிப்சம் பெறலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

மேட்டூர் அணை நீர்மட்டம் 82.04 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 82.04 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 1,258 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது.

அணையிலிருந்து விநாடிக்கு 1,027 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 44.01 டி.எம்.சி.

**பயிர் விளைச்சல் போட்டி மூலம் பரிசுத் திட்டம்**

First Published : 22 Jul 2010 10:29:11 AM IST

திண்டுக்கல், ஜூலை 21:   நலிவடைந்துவரும் உழவுத் தொழிலை மேம்படுத்த அரசின் வேளாண்மைத் துறை மூலம் விவசாயத்தில் நவீனத் தொழில்நுட்பங்களைப் புகுத்தி  விவசாயிகள் லாபமடையும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவரம் அறியாத விவசாயிகளை ஊக்கப்படுத்தி முன்னோடி விவசாயிகளாக மாற்றுவதை வேளாண்மைத்துறை தலையாயப் பணியாகக் கொண்டுள்ளது.

விவசாயத்தில் நவீனத் தொழில்நுட்பங்களைப் புகுத்தி, அதிக மகசூல் எடுக்க ஆர்வமுள்ள விவசாயிகளை ஊக்கப்படுத்தும் விதமாக, ஆண்டுதோறும் பயிர் மகசூல் போட்டி வைத்து, வேளாண் துறை பரிசுத் தொகை வழங்கி வருகிறது.

மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் இப்போட்டியில் விவசாயிகள் பங்கு பெறலாம்.

குறைந்தபட்சம் 50 சென்ட் அளவுக்கு சாகுபடி செய்திருந்தால் கூடப் போதுமானது. நெல், கடலைப் பயிர்களுக்கு மாநில அளவிலான போட்டியில் பங்குபெற ரூ.100-ம், இதரப் பயிர்களுக்கு ரூ.50-ம் கட்டணமாகச் செலுத்த வேண்டும்.  மாவட்ட அளவிலான போட்டியில் பங்குபெற நெல், கடலைக்கு ரூ.50-ம், இதர பயிர்களுக்கு ரூ. 25-ம் செலுத்த வேண்டும்.  மாநில அளவில் முதலிடம் பெறுவோருக்கு ரூ. 20 ஆயிரம், இரண்டாம் பரிசாக ரூ. 10 ஆயிரமும், மாவட்ட அளவிலான போட்டியில் முதலிடம் பெறும் விவசாயிக்கு முதல்பரிசாக ரூ.10 ஆயிரமும், இரண்டாம் பரிசாக ரூ.5 ஆயிரமும் வழங்கப்படும்.

தற்போது வடமதுரை பகுதியில் கதிர் முற்றிடும் நிலையில் கம்பு, சோளம் ஆகிய பயிர்கள் இறவையில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. ஆர்வமுள்ள உழவர்கள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் நுழைவுத் தொகையை அரசுக்கு செலுத்தி அறுவடை செய்வதற்கு 15 தினங்களுக்கு முன்பாகத் தெரிவிக்க வேண்டும்.

உழவர்களின் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் அறுவடை மேற்கொண்டு மகசூல் கணக்கிடப்பட்டு பரிசுகள் வழங்க சிபாரிசு செய்யப்படும்.

விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென, வடமதுரை வேளாண் உதவி இயக்குநர் பெ.பாஸ்கரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**பயிர் விளைச்சல் போட்டி மூலம் பரிசுத் திட்டம்**

First Published : 22 Jul 2010 10:29:11 AM IST

திண்டுக்கல், ஜூலை 21:   நலிவடைந்துவரும் உழவுத் தொழிலை மேம்படுத்த அரசின் வேளாண்மைத் துறை மூலம் விவசாயத்தில் நவீனத் தொழில்நுட்பங்களைப் புகுத்தி  விவசாயிகள் லாபமடையும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவரம் அறியாத விவசாயிகளை ஊக்கப்படுத்தி முன்னோடி விவசாயிகளாக மாற்றுவதை வேளாண்மைத்துறை தலையாயப் பணியாகக் கொண்டுள்ளது.

விவசாயத்தில் நவீனத் தொழில்நுட்பங்களைப் புகுத்தி, அதிக மகசூல் எடுக்க ஆர்வமுள்ள விவசாயிகளை ஊக்கப்படுத்தும் விதமாக, ஆண்டுதோறும் பயிர் மகசூல் போட்டி வைத்து, வேளாண் துறை பரிசுத் தொகை வழங்கி வருகிறது.

மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் இப்போட்டியில் விவசாயிகள் பங்கு பெறலாம்.

குறைந்தபட்சம் 50 சென்ட் அளவுக்கு சாகுபடி செய்திருந்தால் கூடப் போதுமானது. நெல், கடலைப் பயிர்களுக்கு மாநில அளவிலான போட்டியில் பங்குபெற ரூ.100-ம், இதரப் பயிர்களுக்கு ரூ.50-ம் கட்டணமாகச் செலுத்த வேண்டும். மாவட்ட அளவிலான போட்டியில் பங்குபெற நெல், கடலைக்கு ரூ.50-ம், இதர பயிர்களுக்கு ரூ. 25-ம் செலுத்த வேண்டும். மாநில அளவில் முதலிடம் பெறுவோருக்கு ரூ. 20 ஆயிரம், இரண்டாம் பரிசாக ரூ. 10 ஆயிரமும், மாவட்ட அளவிலான போட்டியில் முதலிடம் பெறும் விவசாயிக்கு முதல்பரிசாக ரூ.10 ஆயிரமும், இரண்டாம் பரிசாக ரூ.5 ஆயிரமும் வழங்கப்படும்.

தற்போது வடமதுரை பகுதியில் கதிர் முற்றிடும் நிலையில் கம்பு, சோளம் ஆகிய பயிர்கள் இறவையில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. ஆர்வமுள்ள உழவர்கள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் நுழைவுத் தொகையை அரசுக்கு செலுத்தி அறுவடை செய்வதற்கு 15 தினங்களுக்கு முன்பாகத் தெரிவிக்க வேண்டும்.

உழவர்களின் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் அறுவடை மேற்கொண்டு மகசூல் கணக்கிடப்பட்டு பரிசுகள் வழங்க சிபாரிசு செய்யப்படும்.

விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென, வடமதுரை வேளாண் உதவி இயக்குநர் பெ.பாஸ்கரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**நீர்ப்பாசனத் திட்டத்தை தடுக்க ஆந்திரம் நோக்கி சிவ சேனை பேரணி**

First Published : 23 Jul 2010 01:19:19 AM IST

ஹைதராபாத், ஜூலை 22: ஆந்திர மாநில எல்லையில் நடைபெற்றுவரும் நீர்ப்பாசன திட்டத்தைத் தடுக்க ஆந்திர மாநிலம் நோக்கி சிவசேனை கட்சியினர் வியாழக்கிழமை பேரணி மேற்கொண்டதால், இரு மாநில எல்லையில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

மகாராஷ்டிர எல்லையில் நடைபெற்றுவரும் பாப்லி நீர்ப்பாசனத் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அதைப் பார்வையிடச் சென்ற தெலுங்கு தேசக் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு மற்றும் அவரது கட்சியினரை மகாராஷ்டிர போலீஸôர் அண்மையில் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

பின்னர் வலுக்கட்டாயமாக அவரை விமானத்தில் ஏற்றி ஹைதராபாதுக்கு அனுப்பிவைத்தனர். இதன் காரணமாக இரு மாநிலங்களுக்கிடையே பிரச்னை உருவானது.
இந்நிலையில் சந்திரபாபு நாயுடுக்கு போட்டியாக சிவ சேனை கட்சியினரும் ஆந்திரம் நோக்கி வியாழக்கிழமை பேரணி நடத்தினர். ஆந்திர எல்லையில் உள்ள நிஸ0மாபாத் மாவட்டத்தில் போதன் என்ற பகுதியில் மஞ்சிரா நதியின் குறுக்கே கட்டப்பட்டுவரும் சலுரா நீர்ப்பாசனத் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அதை தடுத்து நிறுத்துவதற்காக அவர்கள் பேரணி நடத்தினர். நீர்ப்பாசனத் திட்டம் நடைபெறும் பகுதி மகாராஷ்டிர எல்லைக்குட்பட்டது, கடந்த 2004-ம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டபோதே மகாராஷ்டிர அரசு இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததாக சிவ சேனைக் கட்சியினர் தெரிவித்தனர்.
இதற்கிடையே சிவசேனைக் கட்சியினர் பேரணியைத் தொடர்ந்து ஆந்திர மாநில எல்லையில் போலீஸ0ர் குவிக்கப்பட்டு அவர்கள் ஆந்திர மாநிலத்துக்குள் நுழையாதபடி தடுத்து நிறுத்தப்பட்டனர். மகாராஷ்டிர போலீஸ0ரும் பேரணியை தடுத்து நிறுத்தினர். இதனால் இரு மாநில எல்லைப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அதிக அளவில் அங்கு போலீஸ0ர் குவிக்கப்பட்டனர்.

**வேலை உறுதி திட்டத்தில் குறைந்த கூலி: விவசாயிகள் கண்டன ஆர்ப்பாட்டம்**

First Published : 23 Jul 2010 09:16:52 AM IST

மதுராந்தகம்,ஜூலை 22: தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் குறைந்த கூலி வழங்குவதைக் கண்டித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் பழையனூரில் வியாழக்கிழமை நடைபெற்றது.
÷ஊராட்சியில் தேசிய ஊரக வேலை திட்டத்தின் கீழ் வேலை நூறு நாள்களும், அரசு அறிவித்த கூலி ரூ.100-ஐ முழுமையாகவும் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.
÷இதில் வட்டப் பொருளாளர் ஜி.தனசேகர் தலைமை தாங்கினார். சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் கிருஷ்ணராஜ், வட்டச் செயலர் எம்.நாகேஷ், சிபிஎம் மாவட்ட குழு உறுப்பினர் வி.பிரமிளா, ஒன்றிய குழு உறுப்பினர் ராஜா, நகர மன்ற உறுப்பினர் மாசிலாமணி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

தினமலர்

**ஆர்.டி., மலையில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண் திட்ட விளக்கம்**

குளித்தலை: தோகமலை பஞ்சாயத்து யூனியன், ஆர்.டி.மலை பஞ்சாயத்து அலுவலகத்தில், ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்ட விளக்க நிகழ்ச்சி நடந்தது. மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சந்திரசேகரன், ஆர்.டி.ஓ., பாலசுப்பிரமணியன், வேளாண் உதவி இயக்குனர் காதர் மொஹைதீன் முன்னிலை வகித்தனர். புழுதேரி சரஸ்வதி வேளாண் அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் திரவியம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் கந்தசாமி திட்டம் குறித்து விளக்கிப் பேசினர். கரூர் கலெக்டர் உமாமகேஸ்வரி பேசியதாவது: தோகமலை பஞ்சாயத்து யூனியன் பகுதியில் விவசாயத்துக்கு பயன்படாத 1,593 ஹெக்டேர் நிலம் உள்ளது.

இந்த தரிசு நிலங்களை பயன்படுத்திட நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் அரசு வழங்கும் விவசாய தொழில்நுட்பம் விவசாயிகளை சென்றடைகிறது. உலகிலேயே சிறந்த தொழில் விவசாயம். இத்தொழிலில் ஈடுபடுவோர் முதலாளியாகவும், தொழிலாளியாகவும் உள்ளனர். இளைஞர்கள் முன்வந்தால் விவசாயத் தொழில் முன்னேற்றமடையும். விவசாய தொழில்நுட்பம் குறித்து புழுதேரி சரஸ்வதி வேளாண் அறிவியல் மையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியை விவசாயிகள் பயன்படுத்தி தரிசு நிலங்களை செம்மைப்படுத்த வேண்டும். இவ்வாறு கலெக்டர் பேசினார். வேளாண், வருவாய்த் துறை அலுவலர்கள், யூனியன் அலுவலர்கள், பஞ்சாயத்து தலைவர்கள், விவசாயிகள் பங்கேற்றனர். நிறைவாக ரவிக்குமார் நன்றி கூறினார்.

**தென்கரை வாய்க்காலில் தண்ணீர் திறக்காததால் விவசாயிகள் முற்றுகை**

குளித்தலை: குளித்தலை ஆற்றுப் பாதுகாப்பு கோட்ட எஸ்.டி.ஓ., மாரிமுத்து தலைமையில் இரண்டு மாதத்துக்கு முன் நடந்த ஆலோசனைக் கூட்டம் நடந்தது. கூட்டத்தில், விவசாயிகளிடம் ஜூலை 20ம் தேதி தென்கரை வாய்க்காலில் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படும் என தெரிவிக்கப்பட்டது. இதன்படி, கடந்த 20ம் தேதி தென்கரை வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிடவில்லை. ஏமாற்றமடைந்த முன்னாள் பஞ்சாயத்து ஒன்றிய கவுன்சிலர் கோபால் தலைமையில், 25க்கும் மேற்பட்டோர் ஆற்றுப் பாதுகாப்பு கோட்ட அலுவலகத்தை முற்றுகையிட்டனர். அவர்களிடம் விரைவில் திறக்க நடவடிக்கை எடுப்பதாக கூறி அதிகாரிகள் சமாளித்து அனுப்பினர். எஸ்.டி.ஓ., மாரிமுத்து கூறியதாவது: தென்கரை வாய்க்கால் மற்றும் கட்டளை மேட்டு வாய்க்கால், பிரிவு வாய்க்கால்களில் மராமத்து, கட்டுமானப் பணிகள் நடந்து

வருகிறது. பணி நிறைவடையாததால், குறிப்பிட்ட தேதியில் தண்ணீர் திறக்க முடியவில்லை. அடுத்த ஒரு வாரத்தில் வாய்க்கால்களில் தண்ணீர் திறக்கப்படும். இவ்வாறு கூறினார்.

**மாவட்ட காலநிலையில் மாற்றம் அணைகளின் நீர் மட்டம் உயருது**

ஊட்டி : நீலகிரி மாவட்ட காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு, குளிர் வாட்டுகிறது; அணைகளிலும் நீர் மட்டம் உயர்கிறது.ஊட்டியில் இதுவரை நிலவிவந்த "ரீல் மான்சூன்' காலநிலை மாறி, தற்போது தான் "ரியல் மான்சூன்' நிலவிவருகிறது; கடும் பனிமூட்டத்துடன் பருவ மழை பெய்து வருவதால், அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து காலநிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.வங்கக் கடலில் புயல் சின்னம் ஏற்பட்ட போது மட்டுமே, நீலகிரி மாவட்டத்தில் மழை பெய்தது; பருவமழையில் தாமதம் ஏற்பட்டதால், நீராதாரங்களில் நீர் மட்டம் குறைந்து, மக்களின் அத்தியாவசிய தேவை மற்றும் மின் உற்பத்தியில் சிக்கல் நிலவியது. மேடான பகுதிகளில் விவசாயம் மேற்கொண்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

ஆடி மாதம் துவங்கியதில் இருந்து காலநிலையில் மாற்றம் ஏற்பட்டது; ஊட்டி, குன்னூர், கூடலூர், கோத்தகிரி பகுதிகளில் காற்றுடன் மழை பெய்தது. தாமதமான பருவமழையும் சேர்ந்ததால், சில நாட்களாக குளிர் வாட்டுகிறது. குறைந்தபட்ச காலநிலை 9 டிகிரி, அதிகபட்சம் 18 டிகிரி செல்சியசாக உள்ளது.மெல்ல, மெல்ல உயருது:நீலகிரி மாவட்டத்தில், மின் உற்பத்திக்கும், மக்களின் நீர் தேவைக்கும் பயன்படும் அணைகளின் மட்டம், நீர் பிடிப்பு பகுதிகளிலிருந்து சேகராகும் நீரால் உயர்கிறது; இங்குள்ள 13 அணைகளிலிருந்து, தினமும் 750 மெகாவாட் மின் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. ஏமாற்றி வந்த பருவ மழை தற்போது தலைகாட்டியுள்ளதால், மின் உற்பத்தி மற்றும் நீர் தேவைக்கான அணைகளின் நீர் மட்டம் மெல்ல, மெல்ல உயர்கிறது. இதன் மூலம், சமவெளிப் பகுதி மக்களுக்கும், விவசாயிகளுக்கு போதிய நீர் கிடைக்க வாய்ப்புள்ளது. மின் உற்பத்தியிலும் நிலவிய பாதிப்பு நீங்கி, இரண்டாவது சீசனுக்கு தேவைப்படும் நீர் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மானிய விலையில் எரிபொருள் விவசாயிகளுக்கு வழங்க கோரிக்கை**

ஊட்டி : "நீலகிரி விவசாயிகளின் பயன்பாட்டுக்கு, மானிய விலையில் டீசல், பெட்ரோல் வழங்க வேண்டும்' என கோரிக்கை விடப்பட்டுள்ளது.நீலகிரி உருளைக்கிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர் சங்கத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, குடிமைப்பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை செயலருக்கு அனுப்பியுள்ள மனு: நீலகிரி மாவட்டத்தில் பருவமழை பொய்த்து, நீர் தட்டுப்பாடு அதிகரிப்பதால், விவசாயிகள் சிரமப்படுகின்றனர்; நீர் பாசனத்துக்கு, மின் துறையின் இணைப்பு கிடைப்பதில்லை; இலவச மின் இணைப்பு கிடைக்கவும் தாமதமாகிறது. சிறு விவசாயிகள் பயன்படுத்தும் ஆயில் மோட்டார்களுக்கான டீசல், பெட்ரோல் பயன்படுத்த

கூடுதல் பணம் செலவாகிறது. மீனவர்களுக்கு வழங்குவதை போல், நீலகிரி விவசாயிகளுக்கும் மானிய விலையில் டீசல்,பெட்ரோல் வழங்க வேண்டும். இவ்வாறு, கிருஷ்ணமூர்த்தி கூறியுள்ளார்.

**விவசாயத்திற்கு மும்முனை மின்சாரம் களக்காடு யூனியன் சேர்மன் கோரிக்கை**

களக்காடு : களக்காடு யூனியன் பகுதியில் விவசாயத்திற்கு மும்முனை மின்சாரம் தடையின்றி வழங்க மாவட்ட கலெக்டருக்கு யூனியன் சேர்மன் கோரிக்கை விடுத்துள்ளார்.
களக்காடு யூனியன் சேர்மன் தமிழ்செல்வன் கலெக்டருக்கு அனுப்பியுள்ள மனுவில் தெரிவித்திருப்பதாவது: களக்காடு யூனியனிற்குட்பட்ட மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும். இப்பகுதியில் பெரும்பாலான விளைநிலங்கள் கிணற்று பாசனத்தை நம்பியுள்ளன. விவசாயிகள் விளைநிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச வசதியாக மும்முனை மின்சாரத்தை பகலில் 6மணி நேரமும், இரவு 3மணி நேரமும் என மொத்தம் 9மணி நேரம் மின்வாரியம் வழங்கி வருகிறது. இந்த மின்சாரம் விவசாய பணிகளுக்கு போதுமானதாக இல்லை. வாழை, நெல் மற்றும் பருத்தியை காப்பாற்ற அரசு உத்தரவுப்படி தினமும் 18மணி நேரம் மும்முனை மின்சார வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மும்முனை மின்சாரத்திற்கான நேரத்தை அதிகரிக்காவிட்டால் விவசாயிகளை திரட்டி போராட்டம் நடத்தப்படும். இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கோவில்பட்டியில் கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்**

கோவில்பட்டி : கோவில்பட்டியில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாய சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.தமிழ்நாடு விவசாய சங்கத்தினர் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோவில்பட்டியில் ஆர்ப்பாட்டம் நடந்தது. கோவில்பட்டி தாலுகா ஆபிஸ் அருகில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றிய செயலாளர் உத்தண்டராமன் தலைமை வகித்தார். சங்க நிர்வாகிகள் சின்னச்சாமி, ரத்தினவேல், பண்ணாயிரம், ராமசுப்பு, அய்யலுச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொ டர்ந்து பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பியதுடன் சங்கத்தை சேர்ந்த பலர் பேசினர்.

மேலும் சங்கத்தின் தூத்துக்குடி மாவட்ட செயலாளர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். அப்போது கூட்டு குடிநீர் திட்டத்தில் குடிநீர் வழங்காத அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கவும், வீடு கட்டி குடியிருக்கும் அனைவருக்கும் வீட்டு மனைப்பட்டா வழங்கவும், முதியோர் மற்றும் விதவை உதவித்தொகையை தகுதியான அனைவருக்கும் வழங்கவும், உழவர் அட்டை வழங்கப்படாத அனைவருக்கும் அட் டை வழங்கவும், நிலமோசடி செய்வோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், வருவாய்த் துறையில் பட்டா பெயர் மாறுதல், மனுக்கள் மீது லஞ்சம் கேட்பதை நிறுத்தவும், விஏஓக்கள் அந்தந்த கிராமத்தில் குடியிருக்கவும், மக்களின் மனுவிற்கு

ஒப்புதல் ரசீது கொடுக்கவும், மினிபஸ் கட்டணம் உயர்த்தப்பட்டதை தடுக்கவும், உள் ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரமும் நிதியும் வழங்கவும், இளையரசனேந்தல் அரசுத்துறைகள் அனைத்தையும் கோவில்பட்டியுடன் இணைக்கவும், விவசாய விளை பொருட்களுக்கு கட்டுபடியாகும் விலையை வழங்கவும், விதை உரம் பூச்சி மருந்துகளை மானிய விலையில் வழங்கவும், நிலம் இல்லாத விவசாயிகளுக்கு 2 ஏக்கர் விவசாய நிலம் வழங்கவும், பொதுவிநியோக திட்டத்தில் 50 ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் வாங்கினால் தான் அரிசி கிடைக்கும் என்ற முறையை மாற்றவும், எட்டயபுரம் மெயின் ரோட்டிலுள்ள கழிவுகளை அகற்றவும், ஜமாபந்தியில் கொ டுக்கப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், தமிழக அரசுத்துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பவும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் சங்க ஒன்றியக்குழு உறுப்பினர்கள் துரைராஜ், பொன்ராஜ், அய்யனார், ரா÷ ஜந்திரன், அய்யாத்துØ ர, சண்முகம், தங்கப்பன், சுப்புராஜ், ராஜா, சிபிஎம் ஒன்றிய செயலாளர் முத்துக்காந்தாரி, கட்டுமான தொழிலாளர் சங்க தலைவர் பரமசிவம், செயலாளர் மாரிச்சாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**ராகி சாகுபடியில் வறட்சியை தாங்க புதிய தொழில் நுட்பம் அறிமுகம்**

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ராகி சாகுபடியில் பயிர்கள் வறட்சியை தாங்க கூடிய வகையில், "விதை கடினப்படுத்துதல்' என்ற புதிய தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவ மழை தற்போது பரவலாக பெய்து வருகிறது. அதனால், விவசாயிகள் நெல், கடலை, துவரை மற்றும் ராகி சாகுபடியில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர். மாவட்டத்தில் 70 ஆயிரம் ஹெக்டேரில் தற்போது விவசாயிகள் ராகி சாகுபடியில் ஈடுபட தயராகி வருகின்றனர். குறிப்பாக ஓசூர், தேன்கனிக்கோட்டை, தளி மற்றும் கெலமங்கலம் பகுதியில் 50 ஆயிரம் ஹெக்டேரில் விவசாயிகள் அதிகளவு ராகி விதை சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். இங்கு உற்பத்தியாகும் ராகி வெளிமாநிலங்களுக்கும், தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும் ஏற்றுமதியாகிறது.

கடந்த ஆண்டு ஒரு ஹெக்டேருக்கு ஒன்றரை முதல் இரண்டு டன் ராகி மகசூல் கிடைத்தது. நடப்பாண்டு இரண்டரை டன் ராகி சாகுபடியில் மகசூல் கிடைக்க இலக்கு நிர்ணயித்து வேளாண்மை துறை நடவடிக்கை எடுத்துள்ளது. பொதுவாக ஜூன், ஜூலையில் சாகுபடி செய்ய முக்கிய சீசன் காலமாக கருதப்படுகிறது. நான்கு மாதம் கழித்து நவம்பர், டிசம்பரில் ராகி அறுடைக்கு தயாராகி விடுகிறது. ஜூன், ஜூலை தென்மேற்கு பருவமழை மழை ராகி சாகுபடிக்கு ஒரளவு கைகொடுக்கிறது. ஆகஸ்ட் மற்றும் செம்டம்பர் இரண்டாம் வரை வரை கடும் வறட்சி

காலம் ஏற்படுகிறது. அப்போது, ராகி பயிர்கள் வறட்சியால் வாடி காய்ந்து விட அதிக வாய்ப்புகள் உள்ளது. இதனால், சாகுபடி செய்த விவசாயிகளுக்கு மகசூல் பாதிக்கப்படுவதோடு நஷ்டமும் ஏற்படுகிறது.
இதை தவிர்க்க நடப்பாண்டு ராகி சாகுபடியில் வறட்சியை சமாளிக்கும் வகையில் விதைகள் கடினப்படுத்துதல் என்ற புதிய தொழில்நுட்பத்தை வேளாண் துறை அறிமுகம் செய்துள்ளது.

ஓசூர் வேளாண் துறை உதவி இயக்குனர் நாகராஜ் "நமது' நிருபரிடம் கூறியதாவது: ராகி சாகுபடியை பொறுத்தவரையில் ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவை எதிர்பார்த்து தமிழக உணவுதுறை காத்திருகிறது. பிற மாவட்டங்களில் ராகி சாகுபடி செய்தாலும், அவை விளைவதில்லை. அதனால், ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் ராகி சாகுபடி பரப்பை அதிகரித்து உற்பத்தியை பெருக்க, "விதை கடினப்படுத்துதல்' என்ற புதிய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்துள்ளோம். ராகி விதைகளை விதைக்கும்போது, 20 கிராம் "பொட்டாசியம் டை-ஹைட்ரஜன் பாஸ்பேட்' என்ற மருந்தினை ஒரு லிட்டர் நீரில் கலக்க வேண்டும். இக்கலவையில் 5 கிலோ ராகி விதைகளை கலந்து 6 மணி நேரம் ஊற வைக்க வேண்டும்.

இவ்வாறு கடினமான விதைகளை நிழலில் உலர வைத்து 15 நாள் வரை வைத்திருந்து நிலத்தில் விதைக்கலாம். இதன் மூலம் ராகி பயிர்களுக்கு வறட்சியை தாங்கும் சக்தி கிடைத்து கதிர்கள் எண்ணிக்கை அதிகமாவதோடு, மகசூலும் அதிகம் கிடைக்கிறது. "விதை கடினப்படுத்துதல்' தொழில்நுட்பம் மூலம் ஹெக்டேருக்கு இரண்டரை டன் மகசூல் வரை கிடைக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**விதி மீறிய நான்கு கடை உரம் விற்பனைக்கு தடை**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசு விதிமுறைகளை மீறி உரம் மற்றும் பூச்சி மருந்துகளை விற்பனை செய்த நான்கு கடைகளில் உரம் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாய பணிகளுக்கு தேவையான உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலமாகவும் இருப்பு வைத்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தனியார் உர விற்பனை நிலையங்களில் அரசின் விதிமுறைகளை கடைபிடிக்காமல் உரங்களை அதிக விலைக்கும், காலாவதியான பூச்சி மருந்துகளை விற்பனை செய்வதாகவும் விவசாயிகளிடம் இருந்து புகார் வந்தது.

வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) ராமகிருஷ்ணன் தலைமையில் வேளாண் அலுவலர்கள் கிருஷ்ணன், சாகுல்ஹமீது ஆகியோர் அடங்கிய குழுவினர் சூளகிரி மற்றும் ராயக்கோட்டை பகுதிகளில் உள்ள உரக்கடைகளில் திடீர் ஆய்வு செய்தனர். ஆய்வில்,

ராயக்கோட்டையில் இரு தனியார் உரக் கடைகளிலும், உத்தனப்பள்ளியில் ஒரு தனியார் உரக் கடையிலும் அரசின் விதிமுறைகளை மீறி அதிக விலைக்கு உரங்கள் விற்பனை செய்வதும், இதற்கான ரசீதை விவசாயிகளுக்கு கொடுக்காமல் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டு சம்மந்தப்பட்ட மூன்று கடைகளிலும் உரம் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், சூளகிரி பகுதியில் உள்ள தனியர் பூச்சி மருந்து கடையில் அதிக விலைக்கு பூச்சி மருந்தை விற்பனை செய்தது கண்டுபிடிக்கப்பட்டு, கடையில் பூச்சி மருந்து விற்பனை செய்ய தடைவிதிக்கப்பட்டுள்ளது.

**உப்பாறு ஓடைகளில் ஆக்கிரமிப்புகள்: விவசாயிகள் அதிருப்தி**

உடுமலை : உப்பாறு ஓடைகளில் அதிகரித்து வரும் ஆக்கிரமிப்புகள் குறித்து வருவாய்துறை அதிகாரிகள் கண்டுகொள்ளாததால் விவசாயிகள் கடும் அதிருப்தியில் உள்ளனர்.குடிமங்கலம் பகுதியில் மழைக்காலங்களில் வெளியேறும் தண்ணீர் சிறிய ஓடைகளின் வழியாக சென்று உப்பாறு ஓடையில் கலக்கிறது. இப்பகுதி கிராமங்களில் 150க்கும் அதிகமான சிறிய ஓடைகள் உள்ளன. நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்க ஓடைகளின் குறுக்கே பல்வேறு இடங்களில் தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன.ஓடைகளில் அதிகரித்துள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து வருவாய்துறை அதிகாரிகள் கண்டுகொள்ளாததால் ஓடைகள் காணாமல் போய் வருகின்றன.சோமவாரப்பட்டி ஊராட்சி பெதப்பம்பட்டியில் பொதுப்பணித்துறை சார்பில் உப்பாறு ஓடையின் குறுக்கே பெரிய தடுப்பணை கட்டப்பட்டுள்ளது.

தடுப்பணைக்கு பொட்டையம்பாளையம், அம்மாபட்டி மற்றும் சுற்றுப்பகுதிகளிலிருந்து வெளியேறும் மழை நீர் முக்கிய நீர் வரத்தாக உள்ளது. இந்நிலையில், தடுப்பணைக்கு செல்லும் ஓடையை ஆக்கிரமித்து தனியார் சிலர் வழித்தடம் அமைத்துள்ளனர். பெதப்பம்பட்டி மயான பகுதியிலிருந்து தடுப்பணை வரை ஓடையின் கரைகள், நீர் செல்லும் பாதை ஆகியவற்றை சேதப்படுத்தி வழித்தடம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால், அதிர்ச்சியடைந்த விவசாயிகள் மாவட்ட கலெக்டர் மற்றும் வருவாய்துறை அதிகாரிகளிடம் புகார் அளித்தனர். அதிகாரிகள் கண்டுகொள்ளாத நிலையில் மழை நீர் இயல்பாக ஓடையில் செல்வது தடைபட்டு பல்வேறு பிரச்னைகள் ஏற்படும் நிலை உள்ளது.இது குறித்து விவசாயிகள் மாவட்ட கலெக்டருக்கு அனுப்பியுள்ள புகார் மனுவில்,"ஆக்கிரமிப்புகளால் பல கிராமங்களில் உப்பாறு ஓடை பல கிராமங்களில் காணாமல் போயுள்ளது. பெதப்பம்பட்டி ஓடையில் அதிகாரிகளின் ஆசியோடு வழித்தடம் அமைக்கப்பட்டுள்ளது. சுங்காரமுடக்கு பகுதியில் ரோட்டோரத்தில் உள்ள மழை நீர் வெளியேறும் கால்வாயும் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளது.இதனால், மழை நீர் வெளியேற முடியாமல்

தேங்கி பொள்ளாச்சி - தாராபுரம் ரோடு சேதமடையும் வாய்ப்புள்ளது. ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றாவிட்டால் போராட்டத்தில் ஈடுபடுவோம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

***விவசாய பயிர்களை அழித்த காட்டுயானைகள்***

*பாலக்காடு,ஜூலை.23–*

*பாலக்காடு மாவட்டம், மன்னார்காட்டை அடுத்த அலநல்லூர் அருகே எடத்தநாட்டு கரையில் என்.எஸ்.எஸ்.எஸ்டேட்டுக்கு சொந்தமான விவசாய நிலங்கள் உள்ளன. இங்கு வாழைத்தோட்டங்கள், பாக்குமரங்கள், நெல் பயிர்கள் ஆகியவை பயிரிடப்பட்டு இருந்தன. தினமும் ஏராளமான விவசாய கூலி தொழிலாளர்கள் இங்கு வந்து வேலை பார்த்து வந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் காட்டு பகுதியில் இருந்து இந்த எஸ்டேட் தோட்டத்திற்குள் புகுந்த 5 காட்டு யானைகள் வாழை தோட்டத்திற்குள் புகுந்து அட்டகாசம் செய்தன. வாழை பழங்களை சாப்பிட்டும், வாழை மரங்களை சாய்த்தும் தோட்டத்திற்குள் ஆங்காங்கே ஓடியும் தனது அட்டகாசத்தை நிகழ்த்தின. பாக்குமரங்களை பிடுங்கியும், நெல் வயலுக்குள் ஓடியும் யானைகள் சுற்றி திரிந்தன.*

*இதை பார்த்த தொழிலாளர்கள் யானையை விரட்ட பட்டாசுகள் வெடித்தும், தகரத்தால் ஒலியையும் எழுப்பினார்கள். ஆனால் யானைகள் கலைந்து செல்லவில்லை. நீண்ட நேரத்திற்கு பிறகு அங்கிருந்து சென்றன. யானைகளின் அட்டகாசத்தால் வனப்பகுதியை ஒட்டி உள்ள விவசாய நிலங்களில் மின்வேலி அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.*

***திருவனந்தபுரத்தில், தேசிய அளவிலான கால்நடை– பறவைகள் கண்காட்சி இன்று தொடங்குகிறது***

*திருவனந்தபுரம்,*

*ஜூலை.23–*

*கேரள உணவுத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை உள்ளிட்ட துறைகள் சார்பில் தேசிய அளவிலான கால்நடை, விலங்குகள் மற்றும் பறவைகள் கண்காட்சி மற்றும் உணவுத் திருவிழா இன்று (வெள்ளிக்கிழமை) தொடங்கி 27–ந் தேதி வரை திருவனந்தபுரம் கனகக்குன்று அரண்மனை வளாகத்தில் நடைபெறுகிறது.*

*இதில் 300 ஸ்டால்களில் இந்தியாவின் பல்வேறு அபூர்வ வகை கால்நடைகள், ஆடுகள், நாய்கள் உள்ளிட்ட வளர்ப்பு பிராணிகள், முட்டை –இறைச்சி கோழிகள், காடைப் பறவை, அலங்கார வகை கோழிகள் உள்பட பல்வேறு பறவைகளை பொதுமக்கள் கண்டு களிக்கலாம். காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெறும் இந்த கண்காட்சிக்கு, பெரியவர் களுக்கு ரூ.10 டிக்கெட் கட்டணம் வசூலிக்கப் படுகிறது. பள்ளிக்கூடங்களில் இருந்து வரும் மாணவ– மாணவிகளுக்கு இலவச அனுமதி வழங்கப்படுகிறது. 27–ந் தேதியன்று, கால் நடை கள், பறவைகளின் விற்பனை நடைபெற உள்ளது.*

*இன்று மாலை 3 மணிக்கு, மத்திய உணவு– விலங்கு பாதுகாப்புத்துறை இணை மந்திரி கே.வி.தோமஸ் கண்காட்சியை தொடங்கி வைக்கிறார். இதன் தொடக்க விழாவுக்கு மந்திரி திவாகரன் தலைமை தாங்குகிறார். மந்திரிகள் தோமஸ் ஐசக், விஜயகுமார், பிரேமச்சந்திரன்,*

ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொள்கிறார்கள்.
இன்று மாலை 6 மணிக்கு கலைநிகழ்ச்சிகளும், 7 மணிக்கு நடனமும், 8 மணிக்கு இன்னிசையும் நடக்கிறது. 24–ந் தேதி இரவு 7 மணிக்கு பின்னணிப் பாடகி சித்ராவின் இன்னிசையும், 25–ந் தேதி இரவு 8 மணிக்கு சினிமா நடிகை சோபனாவின் நடன நிகழ்ச்சியும் நடைபெறும் என்று அரசு செய்திக்குறிப் பில் கூறப்பட்டுள்ளது.

**உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 12.47%–ஆக குறைந்தது**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், ஜூலை 10–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 12.47 சதவீதமாக சற்று குறைந்திருந்தது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில் 12.81 சதவீதமாக இருந்தது.
கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், காய்கறிகள், பச்சை பயிறு, கடல் மீன்கள், மக்காச்சோளம் மற்றும் துவரம் பருப்பு ஆகியவற்றின் விலை குறைந்திருந்தது.
அதேசமயம், கோழிக்கறி, ஊறுகாய், நறுமணப் பொருள்கள், பால் பொருள்கள், குறிப்பிட்ட சில பருப்பு வகைகள், பழங்கள் போன்றவற்றின் விலை அதிகரித்திருந்தது. உணவு சாராத பொருள்களின் கீழ் இடம் பெறும் கச்சா பட்டு, கச்சா ரப்பர் ஆகியவற்றின் விலை உயர்ந்திருந்தது. இருப்பினும், கச்சா பருத்தியின் விலை சற்று குறைந்திருந்தது.
மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும், நாட்டின் பணவீக்க விகிதம், சென்ற ஜூன் மாதத்தில் 10.55 சதவீதமாக இருந்தது.
நடப்பு 2010–ஆம் ஆண்டில் ஜூன் மாதத்தின் இடை பகுதி வரை உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 16 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தது. அதன் பிறகு உணவு பொருள்களுக்கான பணவீக்கம் 13 சதவீதத்திற்கும் கீழ் குறைந்து காணப்படுகிறது.

**சிறப்பு பொருளாதார மண்டலங்கள் ஏற்றுமதி 68 சதவீதம் அதிகரிப்பு**

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில், சிறப்பு பொருளாதார மண்டலங்கள் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதி, சென்ற நிதி ஆண்டின் இதே காலாண்டைக் காட்டிலும் 68 சதவீதம் அதிகரித்து ரூ.58,757 கோடியாக உயர்ந்துள்ளது.
ரூ.2.20 லட்சம் கோடி
சென்ற நிதி ஆண்டில் இந்த ஏற்றுமதி ரூ.2.20 லட்சம் கோடியாக உயர்ந்து இருந்தது. முந்தைய நிதி ஆண்டுடன் ஒப்பிடும் போது இதில் 120 சதவீத (ரூ.99,000 கோடி) வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த2005–06–ஆம் நிதி ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியுடன் (ரூ.22,000 கோடி) ஒப்பிடும்போது, சென்ற நிதி ஆண்டின் ஏற்றுமதி 10 மடங்குகள் அதிகமாகும். ஆக, நாட்டிலுள்ள சிறப்பு பொருளாதார மண்டலங்கள் வாயிலாக மேற்கொள்ளப்படும் ஏற்றுமதி தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வருகிறது.
நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில், சிறப்பு பொருளாதார மண்டலங்கள் வாயிலாக புதிதாக 46,713 பேருக்கு நேரடியாக வேலை வாய்ப்பு உருவாகி உள்ளது.
மொத்த முதலீடு
சென்ற நிதி ஆண்டின் இறுதியில் சிறப்பு பொருளாதார மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீடு ரூ.1,48,488 கோடியாக இருந்தது. இது நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டின் இறுதியில் ரூ.1,66,526 கோடியாக உயர்ந்துள்ளது. எனவே முதல் காலாண்டில் மட்டும் மேற்கொள்ளப்பட்ட முதலீடு ரூ.18,000 கோடியைத் தாண்டி உள்ளது.
ஆக, நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் முக்கிய அங்கம் வகிக்கின்றன.

**நீலகிரி மாவட்டத்தில் விடிய விடிய மழை அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

ஊட்டி, ஜூலை.23–
நீலகிரி மாவட்டம் முழுவதும் விடிய, விடிய தூறல் மழை பெய்தது.
விடிய, விடிய மழை
மலை மாவட்டமான நீலகிரியில் கடந்த சில தினங்களாக விட்டு, விட்டு மழை பெய்து வருகிறது. இந்த மழை ஒரு சில நிமிடங்கள் மட்டுமே பலத்த மழையாக பெய்கிறது. மற்ற நேரங்களில் தூறிக்கொண்டே உள்ளது. அதே நேரத்தில் காற்று வீசுவதால் ஒரு சில இடங்களில் மரங்கள் சாய்ந்து உள்ளன.
இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை சுமார் 6 மணி அளவில் ஊட்டி மற்றும் அதன் சுற்றுப்புறப்பகுதிகளில் மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை பலத்த மழையாக பெய்யாமல் தூறிக்கொண்டே இருந்தது. இதனால் ஊட்டி யில் கடுங்குளிர் நிலவியது. மேலும் இந்த தூறல் மழை விடிய, விடிய நீடித்தது. தொடர்ந்து பகலிலும் மழை தூறிக்கொண்டே இருந்தது.
மழையினால் நேற்று பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்தது. ஊட்டிக்கு வந்த சுற்றுலா பயணிகளும் கடும் அவதி அடைந்தனர். மேலும் நேற்று ஊட்டி நகரை கடும் மேக மூட்டம் சூழ்ந்தது.
சேதங்கள் எதுவும் இல்லை
இதே போல் நேற்று முன்தினம் இரவு குன்னூர் பகுதியில் லேசான தூறல் மழை பெய்தது. கோத்தகிரி, மஞ்சூர் பகுதியிலும் இந்த தூறல் மழை பெய்தது. விடிய, விடிய மழை பெய்ததால் கடுங்குளிர் ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில் ஒரு சில இடங்களில் மிதமான காற்று வீசியது. சாலைகளில் மேக கூட்டங்கள் சூழ்ந்து இருந்தன.
மேலும் கூடலூர், பந்தலூர் தாலுகா பகுதியிலும் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை விடிய, விடிய மழை பெய்தது. இந்த மழை நேற்று பகலிலும் நீடித்தது. பலத்த மழையாக

*பெய்யாமல் தூறிக்கொண்டே இருந்ததால் பெரிய அளவில் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.*

*நீர்வரத்து*

*மழையினால் அணைகள், குளங்கள், ஏரிகள் போன்ற நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து வருகிறது. ஊட்டி நகருக்கு குடிநீர் வழங்கும் முக்கிய அணைகளின் ஒன்றான பார்சன்ஸ்வேலி அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து வருகிறது. மேலும் மார்லிமந்து, டைகர்ல் உள்பட நகருக்கு குடிநீர் வழங்கும் அணைத்து அணைகளுக்கும் தண்ணீர் வரத்து அதிகரித்து வருகிறது. இதனால் ஊட்டி நகரில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது என்று கூறப்படுகிறது.*

*நீலகிரி மாவட்டம் முழுவதும் விடிய, விடிய மழை பெய்த போதிலும் அதிகபட்சமாக தேவாலாவில் 40 மி.மீ. மழை பதிவாகி இருந்தது. மொத்தம் 209 மி.மீ. மழை பதிவாகி இருந்தது.*



கோத்தகிரி உழவர் சந்தையில் காலியாக உள்ள கடைகளை படத்தில் காணலாம்.

மக்கள் வரத்து குறைவாக உள்ளதால்

## கோத்தகிரி உழவர் சந்தை மூடப்படும் அபாயம்?

கோத்தகிரி, ஜூலை.23– கோத்தகிரியில் உழவர் சந்தை மூடப்படும் அபாய நிலை உள்ளது. எனவே அதற்கு புத்துயிர் அளிக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

### 3–வது உழவர்சந்தை

நீலகிரி மாவட்டத்தில் 3–வது உழவர் சந்தை கோத்தகிரி பஜார் பகுதியில் உள்ள வண்டிப்பேட்டையில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 8–ந் தேதி தொடங்கப்பட்டது. இதனை தமிழக கதர்வாரிய துறை அமைச்சர் ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார். உழவர் சந்தையில் 24 கடைகள் கட்டப்பட்டது. இதில் விவசாயிகளுக்கு கடைகள் வைக்க அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது.

விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் விளையும் காய்கறிகளை இடைத்தரகர்கள் பிரச்சனையின்றி நேரடியாக உழவர் சந்தைக்குவிற்பனைக்கு கொண்டு வருவதால் விவசாயிகளுக்கு கட்டுபடியாக விலை கிடைத்த வந்தது. மேலும் பொது மக்களும் குறைந்த விலையில் அனைத்து விதமான காய்றிகள், கீரைகளை வாங்கி வந்தனர்.

### பஸ்கள் இயக்கம்

கிராம பகுதிகளில் இருந்து விவசாயிகள் காய்கறிகளை விற்பனைக்காக கொண்டு வருவதற்கு ஏற்ற வகையில் மினிபஸ் மற்றும் அரசு பஸ்கள் உழவர் சந்தை வரை இயக்கப்பட்டது. அரசு பஸ்களில் காய்கறிகள் இலவசமாக கொண்டு வரவும் அனுமதிக்கப்பட்டது.

அதேபோல் கோத்தகிரியில் இருந்து கட்டபெட்டு,கக்குளா, ஒன்னோரை, கூக்கல்தொரை, மசக்கல், ஜக்கனாரை உள்பட இதர பகுதிகளுக்கு இயக்கப்படும் மினி பஸ்கள் உழவர் சந்தை வழியாக இயக்க வேண்டும் என பொது மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் இயக்கப்பட்டது.

உழவர் சந்தை செயல்பட தொடங்கிய ஒருசில வாரங்கள் மட்டும் மினி பஸ்கள் உழவர் சந்தை வழியாக சென்று வந்தது. அதன் பிறகு மினி பஸ்கள் இயக்கம் நிறுத்தப்பட்டது. கோத்தகிரி உழவர் சந்தையில் மேட்டுப்பாளையம் மண்டிகளில் விற்பனை செய்யப்படும் விலையின் அடிப்படையில் அதை விட சற்று கூடுதலாக விலை நிர்ணயம் செய்யப்பட்டு வந்தது. இதனால் விவசாயிகளுக்கு கட்டுபடியான விலை கிடைத்து வந்தது. தற்போது இந்த நிலை முற்றிலும் மாறி விட்டது.

### குற்றச்சாட்டு

கோத்தகிரி உழவர் சந்தையில் உள்ள 24 கடைகளில் மார்க்கெட்டில் கடை வைத்து உள்ள வியாபாரிகள்,விவசாயிகள் என்ற அடையாள அட்டையை மாவட்ட வேளாண் விற்பனை குழுவிடம் இருந்து பெற்று கடைகள் வைத்துள்ளதாக பரவலான குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தற்போது உழவர் சந்தையில் கடைகள் வைத்துள்ள வியாபாரிகள் கோத்தகிரி மண்டியில் இருந்து காய்கறிகளை வாங்கி உழவர் சந்தையில் விற்பனை செய்து வருகின்ற னர். இதனால் கோத்தகிரி தினசரி சந்தையில் விற்கப்படும் காய்கறிகளின் விலையை விட ரூ.1 அல்லது ரூ.2 மட்டுமே குறைவாக உழவர் சந்தையில் காய்கறிகள் விற்பனை செய்யப் படுகிறது.

சனி, ஞாயிறு, திங்கள் கிழமைகளில் தினசரி சந்தையில் உழவர் சந்தையை காட்டிலும் விலையை குறைத்து காய்கறிகள் விற்பனை செய்யப்படுவதாக பொது மக்கள் தரப்பில் புகார்கள் கூறப்படுகிறது.

### 5 கடைகள் மட்டுமே செயல்படுகிறது

உழவர் சந்தை பிற்பகல் 2 மணி வரை மட்டும் செயல்படுகிறது. உழவர் சந்தை திறந்து இருக்கும் வரையில் தினசரி சந்தையில் விலை ஏறக்குறைய சம நிலையில் உள்ளதாகவும், அதற்கு பிறகு காய்கறிகளின் விலை தினசரி சந்தையில் உயர்த்தி விற்கப்படுவதாகவும் பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் 8 முதல் 10 கடைகளும் மற்ற நாட்களில் அதிகபட்சம் 5 கடைகள் மட்டும் உழவர் சந்தையில் செயல்படுகிறது. தற்போது சனி மற்றும் ஞாயிற்றுகிழமைகள் தவிர வார நாட்களில் உழவர் சந்தையில் பொது மக்கள் நடமாட்டம் குறைவாக இருப்பதால் வியாபாரிகளுக்கு அதிகளவு நஷ்டம் ஏற்படுகிறது. இதனால் உழவர் சந்தை பொழிவிழந்து வருகிறது.

எனவே உழவர் சந்தை வழியாக வாரத்தின் அனைத்து நாட்களிலும் மினி பஸ்கள் சென்று வர நடவடிக்கை எடுக்க வேண்டும். நலிவடைந்து வரும் உழவர் சந்தைக்கு புத்துயிர் அளித்திட மாவட்ட வேளாண் விற்பனை குழுவும்,மாவட்ட நிர்வாகமும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண் டும்.

### மூடப்படும் நிலை

தவறும்பட்சம் உழவர் சந்தையை மூட வேண்டிய நிலை ஏற்படவும் அதிகளவு வாய்ப்புகள் உள்ளது. எனவே பொது மக்களின் நலன் கருதி உழவர்சந்தை தொடர்ந்து செயல்பட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் கோரிக்கையாக உள்ளது.

இது தொடர்பாக உழவர் சந்தை விவசாயிகள் தமிழக முதல்– அமைச்சருக்கு அனுப்பி உள்ள மனுவில் கூறப்பட்டு உள்ளதாவது:–

நாங்கள் கடந்த ஒரு வருடமாக கோத்தகிரி பஜார் பகுதியில் அமைந்துள்ள உழவர்சந்தையில் விவசாய விளை பொருட்களை விற்பனை செய்துவருகிறோம். ஆனால் உழவர்சந்தை உள்ள இடம் மக்கள் நடமாட்டம் இல்லாத, போக்குவரத்து வசதி இல்லாத ஒதுக்குப்புறமான இடத்தில் அமைந்துள்ளது. ஆகையால் மக்களின் வருகை மிகவும் குறைவாக உள்ளது.

இந்த நிலை தொடர்ந்தால் உழவர் சந்தை மூடும் அபாயம் உள்ளது. இதற்கு தீர்வு உழவர் சந்தையை இடமாற்றம் செய்வது தான்.

### போராட்டம் நடத்த முடிவு

மக்கள் வரத்து குறைவாக உள்ளதால் நாங்கள் கொண்டு வரப்படும் விவசாய பொருட்கள் வீணாகிறது. அத்துடன் கடன் சுமையும் ஏற்படுகிறது. இது தொடர்பாக ஏற்கனவே மனுக்கள் கொடுக்கப்பட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே இந்த மனுவின் மீது நடவடிக்கை எடுக்காவிட்டால் போராட்டம் நடத்த உள்ளோம் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

திறந்து இருக்கும் கடைகளில் வியாபாரம் இல்லாமல் இருக்கும் காட்சி.